அரியலூர் மாவட்டக் கழக அண்ணா அறிவகத்தை (District Firewall) தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் மாநில கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் சுரேஷ் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், திருச்சி மண்டல தகவல் தொழில் நுட்பஅணி ஒருங்கிணைப்பாளர் ஏ.கேஅருண், உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி - ஊராட்சித்துறையில் பணிபுரியும்

அலுவலர்கள் பயன்பாட்டிற்கான வாகனங்கள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக 5 - அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட ரூ.90 இலட்சம் மதிப்பிலான 10 வாகனங்களையும், ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ரூ.5.83 கோடி மதிப்பில் 216 மின்கல வண்டிகளையும், ரூ.47.50 இலட்சம் மதிப்பில் 5 மோட்டார் வாகனங்களையும் (டிராக்டர்) தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் களப்பணியில் ஈடுபடும் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.90 இலட்சம் மதிப்பிலான 10 புதிய வாகனங்களும், அரியலூர், திருமானூர், செந்துறை, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் ஆகிய 06 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.5,83,20,000 மதிப்பில் 216 மின்கல வண்டிகளும், ரூ.47,50,000 மதிப்பில் 5 மோட்டார் வாகனங்களும் (டிராக்டர்) வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை தொடர்புடையவாகனஓட்டுநர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி மற்றும் இதர அரசு அலுவலர்கள் நகர செயலாளர் இரா.முருகேசன், அரியலூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நிவேதா எம்,முருகன் எம்,எல்,ஏ, தலைமை! வி,எஸ்,பிரபாகர் வரவேற்புரை! குத்தாலம் பி,கல்யாணம், எம்,பன்னீர்செல்வம் எம்,எல்,ஏ,, பங்கேற்பு!

மயிலாடுதுறை மாவட்ட வழக்கறிஞர் அணி பயிற்சி பாசறைக் கூட்டம்!

என்.ஆர்.இளங்கோ எம்.பி. - சூர்யாவெற்றிகொண்டான் - கே.எஸ்.ரவிச்சந்திரன் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஆக. 5 - தி.மு.க. சட்டத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்ட வழக்கறிஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் எலந்தங்குடி வி.எஸ்.பி. திருமண மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார்.

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஞான.இமையநாதன், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பி.முருகமணி, அமிர்த.விஜயகுமார், பஞ்சு.குமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், என்.அன்னாதுரை, எஸ்.கே.முத்துராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழுவூர் வி.எஸ்.பிரபாகரன் வரவேற்றார்.

கூட்டத்தில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோவன் கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி வகுப்பு எடுத்தார். கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் சூர்யா.வெற்க்கொண்டான், கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மு.தினேஷ்குமார், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், அரசு வழக்கறிஞர்கள் இராம.சேயோன், பி.அருள்தாஸ், எஸ்.முத்துகுமார், எஸ்.குணசேகரன், ஜெயந்தி, எஸ்.காத்தியேன், கே.டி.தணிகைபழனி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.மனோகரன், ஆர்.முருகன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், பெரு.விரமணி, தீபா.சத்தியேந்திரன், வெடி எஸ்.பாலமுருகன், அறிவு (எ) க.அறிவுச்செல்வன், ஆர்.செல்வராஜ், டி.ராஜ்குமார், மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், நீதிமன்ற கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பூ.அறிவொளி நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ.த.தங்கமுத்து
ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' 'என்ற முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமினை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். உடன் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், வழக்கறிஞர். ஆ.மணி, எம்.எல்.ஏ. எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் எம்.எல்.ஏ தடங்கம்.பெ.சுப்ரமணி,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,ஆதி திராவிடர் நலக்குழு உறுப்பினர் பி.எஸ்.சரவணன், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ப. ஆகாஷ் தலைமை ! என். கௌதமன் முன்னிலை!

நாகப்பட்டினத்தில் நான்காவது புத்தக திருவிழா!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

நாகை, ஆக. 5 – நாகை மாவட்டம் நாகை மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம், மாவட்ட கல்வி தன்முனைப்பு திட்டம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்னையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நடத்தும் நான்காவது புத்தக திருவிழாவினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். நாகை மாவட்டம் நாகை மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம், மாவட்ட கல்வி தன்முனைப்பு திட்டம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்னையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து நடத்தும் நான்காவது புத்தக திருவிழா தொடக்க விழா நாகை அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

தொடக்க விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவரும் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர். வ.பவணந்தி வரவேற்றார்.

நான்காவது புத்தக திருவிழாவினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து, அரங்கங்களை பார்வையிட்டு, வரலாற்றில் நாகப்பட்டினம் கட்டுரை தொகுப்பு நூல் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு அரசானது கடந்த நான்காண்டுகளில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட சாதனைகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் தொகுக்கப்பட்ட நான்காண்டு சாதனை மலரை வெளியிட்டு பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றன. புத்தகத் திருவிழா என்பது ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே வாசிப்பு திறனை அதிகப்படுத்த வேண்டும். வாசிப்பதில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். வாசிப்பதின் கலையை கற்றுத் தரவேண்டும் என்ற எழுச்சி நோக்கத்தோடு புத்தகத் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றன. நீங்கள் வாசிக்கவேண்டும், வாசிப்பை நேசிக்க வேண்டும் எப்படி ஒவ்வொருவரும் வாசிப்பதினால் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் இளைய சமுதாயமும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த புத்தகத் திருவிழாவினை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த புத்தக திருவிழானது மாணவ மாணவியர் மற்றும் பொது மக்களிடயே சென்று சேர வேண்டும் நோக்கத்தில் நடத்தப்படுகிறது. சிறந்த நூல்களின் ஒரு சில பக்கங்கள் கூட பலரது வாழ்வையே மிகச்சிறந்த உயரத்திற்கு எடுத்துச் சென்ற வரலாறுகள் உண்டு. இந்த புத்தகத் திருவிழா இலட்சக்கணக்கான நல்ல புத்தகங்களை ஒரே இடத்தில் பெறுவதற்கான அருமையான வாய்ப்பாகும்.

இந்த நான்காவது புத்தகத் திருவிழாவானது 01.08.2025 தொடங்கி 11.08.2025 வரை நடைபெறுகிறது. இந்த புத்தக திருவிழாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கும் மேற் பட்ட பதிப்பாளர்கள் கலந்துகொண்டு 105 புத்தக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வகையான புத்தக ங்கள், தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் உள்ள புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும் பொதுமக்கள் ரூ.10லிருந்து ரூ.1000 வரை வாங்கும் புத்தகங்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி உண்டு. தினந்தோறும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், தமிழ் அறிஞர்களின் கருத்தரங்கங்களும் கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

நம் வாழ்க்கைக்கு படிப்பு மிக அவசியம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மாணவப் பருவம் என்பது ஒவ்வொருவரையும் நல்வழிப்படுத்தப்பட வேண்டிய பருவமாகும். அதை படிப்பால் மட்டுமே செய்ய முடியும். அதற்கு புத்தகங்கள் அவசியம். நவீன செல்போன்களும் சமூக ஊடகங்களும் சாதாரணமாகி உள்ள இன்றைய சூழலில் அவைகளுக்கு அடிமையாகி விடாமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியம். படிப்பறிவு ஒரு மனிதனுக்கு நல்ல மன நிலையை உருவாக்கும். வாசிப்புப் பழக்கம் ஒவ்வொருவரையும் நல்வழிப்படுத்தி அவர்களை நல்லவர்களாக உருவாக்க துணை நிற்கும். படிப்பு மிக அவசியம் என்பதை உணர்ந்து இன்றைய தலைமுறையினர் வாசிப்பை அதிகப்படுத்த வேண்டும். புத்தகங்களுக்காக செலவிடுகின்ற தொகை என்பது செலவல்ல, அதுமிகச் சிறந்த மூலதனம்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யா மொழி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் கே.ஸ்ருதி, நாகை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தனபால், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தசன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்டத் கழக பொருளாளர் மு. லோகநாதன், துணைச் செயலாளர் சேர.ரவிச்சந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகான், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ செங்குட்டுவன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார் பொதுக் குழு உறுப்பினர் எல்.எல்.ஈ. பழனியப்பன், வேளாங்கண்ணி ஊர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, க. சத்தியமூர்த்தி, எஸ்பால்ராஜ், பெ.முருகானந்தம், இளம். சுந்தர், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பார்கள் பிரதீப், விஜய், செல்வா, மாவட்ட இலக்கிய அணி தலைவர் சித.கருணாநிதி, நாகை தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, பதிப்பாளர் சங்க தலைவர் சேது.சொக்கலிங்கம், அவர்கள், 12வது வார்டு, நகர் மன்ற உறுப்பினர் த.செந்தில்குமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மு.தனபால், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அரங்கநாதன், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். முடிவில் நாகை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் சிவ சங்கரி நன்றி கூறினார்.

திருவாரூரில் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வழக்கறிஞர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான சட்ட விழிப்புணர்வு குறித்த பயிற்சி வகுப்பில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோவன் எம்.பி. பங்கேற்று தேர்தல் சட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் விநாயகமூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட தலைவர் வழக்கறிஞர் பஞ்சமூர்த்தி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோபி கண்ணன், குமணவள்ளல், சிலம்பரசன்,வீரகுமார்,மகாலட்சுமி , துணை தலைவர் செல்லப்பா, நீதிமன்ற அமைப்பாளர் ராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன். கோவிந்தராஜன்
ஆகஸ்ட் 5 (2020)

இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர பாடுபட்டவர்.

நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.